# மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் தொடர்பான நியம செயற்படுமுறைகள் பற்றிய கையேடு

அரச அதிகாரிகள், அரச சார்பற்ற மற்றும் சமூக நிறுவனங்கள் SOPஐ செயற்படுத்துவதற்கான வழிகாட்டிக் கையேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் தொடர்பான நியம செயற்படுமுறைகள் (SOP) பற்றிய கையேடு

அரச அதிகாரிகள், அரச சார்பற்ற மற்றும் சமூக நிறுவனங்கள் SOPஐ செயற்படுத்துவதற்கான வழிகாட்டிக் கையேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரைத்தல் தொடர்பான நியம செயற்படுமுறைகள் பற்றிய கையேடு

செப்டம்பர் 2017

IOM மனிதாபிமானமிக்கதும் ஒழுங்கானதுமான புலம்பெயர்வு புலம்பெயர்வோருக்கும் சமூகத்திற்கும் நன்மையளிக்கின்றது என்ற தத்துவத்தில் உறுதி பூண்டுள்ளது. அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்பு என்ற வகையில் IOM நிறுவனம் தனது சர்வதேச சமூகத்தின் பங்காளிகளுடன் இணைந்து பின்வரும் முறைகளில் செயற்படுகின்றது: புலம்பெயர்வின் செயன்முறை சவால்களுக்கு முகம் கொடுப்பதில் உதவுதல், புலம்பெயர்வுப் பிரச்சினைகள் பற்றிய புரிதலை மேம்படுத்தல், புலம்பெயர்வுக்கூடாக சமூக பொருளாதார அபிவிருத்திகளை ஊக்குவித்தல், புலம்பெயர்வோரின் கௌரவத்தையும் நலனையும் நிலைநிறுத்துதல்.

இவ்வழிகாட்டி ஏட்டின் அத்தியாயங்களில் வெளிப்படுத்தப்படும் அபிப்பிராயங்கள் அதனை ஆக்கியவர்களுடையவையே அன்றி IOMஇன் கருத்துக்களை பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 1 |
| மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபரை பாதுகாத்தல் | 4 |
| வழிகாட்டல் நெறிமுறைகள் | 5 |
| நியம செயற்படுமுறைமைகளை (SOP) பின்பற்றுதல் | 7 |
| அவத்தை ஒன்று | 10 |
| அவத்தை இரண்டு | 12 |
| அவத்தை மூன்று | 14 |
| அவத்தை நான்கு | 15 |
| அவத்தை ஐந்து | 16 |
| வினாக்களும் விடைகளும்: | 17 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மனித வியாபாரம் எனப்படுவது எல்லைகளையும் சட்ட வரம்புகளையும் தாண்டி நிகழுகின்ற ஒழுங்குபடுத்தப்பட்ட பெரும் குற்றமாகும். இவ்வியாபாரத்தை எதிர்த்துப்போராடவும் தடுக்கவும் வேண்டுமாயின் ஒருங்கிணைக்கப்பட்டதும் முன்னெச்சரிக்கையானதுமான ஒரு முழுமையான அணுகுமுறையொன்று அதற்கெதிராக கருமமாற்றும் சகல பங்குதாரர்களாலும் செயற்படுத்தப்படுவதோடு இனங்காணல், பாதுகாப்பு, குற்றவழக்குத் தொடர்வு போன்றவற்றில் ஒன்றிணைக்கப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணுதல், பாதுகாத்தல், பரிந்துரைத்தல் தொடர்பிலான நியம செயற்படுமுறைகளை (SOP) நீதியமைச்சின் தலைமையிலான தேசிய மனித வியாபார தடுப்புப் படையணியானது இலங்கையிலுள்ள புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் (IOM) உதவியோடு உருவாக்கியுள்ளது. நியம செயற்படுமுறைகள் அமைச்சரவை அங்கீகாரத்தை 2014ஆம் ஆண்டில் பெற்றுள்ளது.

SOP பற்றிய அதிகரித்த அறிவும் விழிப்புணர்வும் இது விடயத்தில் கருமமாற்றும் எல்லா பங்குதாரர்களும் வினைத்திறனாக செயலாற்ற ஏதுவாயமையும். இந்த வழிகாட்டி ஏடானது SOPகளின் வினைத்திறனான பிரயோகத்திற்கு பயன்படும் ஒரு கருவியாக அமையலாம். அரச அதிகாரிகள், அரச சார்பற்ற மற்றும் சமூக நிறுவனங்களுக்கு SOPகள் பற்றிய சிறப்பான புரிதலை ஏற்படுத்துவதே இவ்வழிகாட்டி நூலின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

மனித வியாபாரம் என்பது உலகெங்கிலும் எல்லா நாடுகளிலுமுள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதிக்கும் ஒரு குற்றச்செயலாகும். வரலாற்றில் இடம்பெற்ற நாமறிந்த அடிமைத்தனத்திற்கு இது சமனானதாகும். மக்கள் ஏமாற்றப்பட்டு, வலுக்கட்டாயப்படுத்தப்பட்டு மற்றும் தமது வீடுகளிலிருந்து அல்லது நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவதுடன், இக்குற்றச் செயலில் ஈடுபடும் மனித வியாபாரிகளின் சுயநலத்திற்காக வேண்டி நன்மைகளுக்காக பல்வேறு சூழ்நிலைகளுக்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

மனித வியாபாரம் எனும் குற்றத்திற்குட்படுவோர் பெரும்பாலும் வேலைவாய்ப்பு அல்லது தரமான வாழ்க்கை தொடர்பான கனவுகளை வாக்குறுதிகளாக பெற்றவர்களாக இருப்பதுடன் மனித வியாபாரிகளால் தாம் ஏமாற்றப்பட்டதை பிறகே அறிந்து கொள்வர். மனித வியாபாரிகள் பெரும்பாலும் அயலவர்கள், அறிமுகமானவர்கள் அல்லது தூரத்து உறவினர்களாக இருப்பதுடன், பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, வாக்களிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்மையானவை என நம்பச்செய்து மோசடி செய்வர். பொதுவாக ஏமாற்றப்படும் நபர் தொழில் வாக்குறுதி வழங்கும் நபரிடம் அவர் மீதான நம்பிக்கை காரணமாக, குறைந்த அறிவு அல்லது தனது அழுத்தத்திற்குள்ளான மிக மோசமான சூழ்நிலை காரணமாக கேள்விகள் கேட்பதில்லை.

பாதிக்கப்பட்ட நபர் ஏமாற்றமான சூழ்நிலைக்குள் அகப்பட்டதும் அவரது நண்பர்கள், குடும்பத்தினரிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவார். அவர்கள் வன்முறைக்கு உட்படக்கூடியவர்களாக அல்லது தமக்கோ அல்லது தமது குடும்பத்துக்கோ வன்முறைக்கான அச்சுறுத்தலுக்குட்படுவதுடன், நிர்ப்பந்தம், தடுப்புக்காவல், போதைப்பொருள் பாவனை, அடையாள அட்டை மற்றும் பயண ஆவணங்களின் பறிமுதல் முதலிய அச்சுறுதல்களுக்குட்படுவர்.

பெரும்பாலும் நண்பர்களுடன் அல்லது குடும்பத்துடன் தொடர்பு கொள்ளும் முறைகள் கண்காணிக்கப்படும் அல்லது முற்றாகவே தொடர்பேற்படுத்த முடியாமல் இருக்கும். மேலும், சிலர் தமது நிலைமைக் குறித்து அவமானத்துக்கு உள்ளாவதுடன் அல்லது குற்றவியல் செயன்முறைகள் தொடர்பாக பயமடைவதுடன், மனித வியாபாரிகளால் தாம் நாடுகடத்தப்படலாம் அல்லது பழிவாங்கப்படலாம் என்ற பயத்தினால் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ய தயக்கமடைகின்றனர்.

மனித வியாபாரம் என்பது ஒரு சிக்கலான குற்றமாகும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். இதில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் மனித வியாபாரத்துக்குட்படுத்தப்பட்டு பல்வேறு வழிகளில் ஏமாற்றப்படுகின்றனர்; வீட்டுப் பணிப்பெண்கள், தொழிற்சாலை பணியாளர்கள், கட்டுமானப் பணியாளர்கள், திருமணம் செய்யும் நோக்கம், பாலியல் அடிமைத்தனம், பிச்சை எடுத்தல், பாலியல் படமெடுத்தல், உடலுறுப்புக்களை அகற்றுதல் போன்ற பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஒரு தனி நபர் மனித வியாபாரம் மூலம் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பதை தீர்மானிக்க, மனித வியாபாரக் குற்றம் குறித்த சட்டபூர்வமான வரைவிலக்கணத்தை விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

மனித வியாபாரத்துக்கான சர்வதேச வரைவிலக்கணமானது ஐக்கிய நாடுகள் சபையினால் 2000 ஆண்டில் விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் மனித வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கு தண்டனை வழங்குதல் தொடர்பான நடைமுறை ஆவணத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (இக்கொள்கை பலேர்மோ நெறிமுறை (Palermo Protocol) என அழைக்கப்படுகிறது.) இலங்கையும் இந்த நடைமுறை ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளதுடன் ஐ.நா. கொள்கையை உறுதிப்படுத்தி, அதற்கேற்ற வகையில் சட்ட திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. இலங்கையின் சட்டத்தில் தண்டனை சட்டக் கோவையின் பிரிவு 360 (C), (திருத்தம்) சட்ட இல. 16. வருடம் 2006 போன்றவை மூலம் மனித வியாபாரம் தொடர்பான புதிய விதிகள் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதுடன், இக்குற்றம் தொடர்பாக ஆராய்தல், நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தல் போன்ற நோக்கங்களுக்காக இக்குற்றம் வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆட்கடத்தலுக்கு ஆளான புலம்பெயர்வாளரும் அவரின் பாதிப்பு நிலை காரணமாக முடிவில் மனித வியாபாரத்திற்கு உட்படலாம். இதன் கருத்தாவது ஆட்கடத்தலுக்கு ஆட்படும் புலம்பெயர்வாளர் தாம் வேறொரு நாட்டின் எல்லையை சட்டவிரோதமான முறையில் கடக்கப் போவது பற்றி தெரிந்திருந்த போதிலும், செல்லுபடியாகும் பயண ஆவணங்களின்மையும் அவர் ஒரு முறையற்ற புலம்பெயர்வாளர் என்பதும் மற்ற அபாயத்துக்குட்படும் சூழ்நிலைகளும் இவைகளை சாதகமாக பயன்படுத்தி சுரண்டலுக்கு உட்படுத்தும் மனித வியாபாரிகளால் அவரை மனித விற்பனைக்கு உட்படுத்தலாம். மனித வியாபாரமும் ஆட்கடத்தலும் இரு வேறு குற்றங்களாகும், இதனால் பாதிக்கப்பட்டோருக்கு ஒரே விதமான உதவியும் ஆதரவும் வழங்கப்பட முடியாதென்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

வாழ்க்கை மேம்பாட்டு சந்தர்ப்பங்களைத் தேடும் மக்களை இலக்காகக் கொண்டு குற்ற வலையமைப்பினால் சட்டரீதியற்ற முறையில் நடைபெறும் செயற்பாடுகளே மனித வியாபாரமும் ஆட்கடத்தலுமாகும். ஆட்கடத்தல் என்பது புலம்பெயரும் ஒருவருக்கு சட்டரீதியற்ற முறையில் நாட்டைக் கடந்துச்செல்ல உதவி புரிதலாகும். மனித வியாபாரிகளின் நோக்கமாவது, மனித வியாபாரத்துக்குட்பட்ட நபர்களை சுரண்டுதலாகும்.

**மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் சான்றுகள் தொடர்பான நியம செயற்படுமுறைமைகள்.**

மனித வியாபாரமானது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமாக காணப்படுவதால், துணிந்து செயலில் இறங்குகின்றவர்களை சரியான ஒருங்கிணைக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்பாட்டுடன் அணுகி குற்றத்தை இல்லாதொழிக்கவும் தடுக்கவும் அவசியமாகவுள்ளது. மனித வியாபாரம் தொடர்பாக வினைத்திறனுள்ள அறிமுகம் ஒன்றுக்காக துணிகரமாக செயலில் இறங்குகின்றவர்களிடம் வலிதான ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை அவசியம் என்பது புரிந்துக்கொள்ளப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும்.

இதற்காக வேண்டி இலங்கை அரசாங்கமானது 'மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரை செய்தல் பற்றிய நியம செயற்படுமுறைமைகள் (SOP)' ஒன்றை ஆதரவளித்து உருவாக்கியுள்ளது. இது மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காணல், பாதுகாத்தல் மற்றும் பரிந்துரை செய்தல் போன்றவற்றுக்காக செயலாற்றும் சகல நிறுவனங்களுக்கும் வழிகாட்டியாக காணப்படுகின்றது.

இலகுவான சான்றாதாரம் தொடர்நடவடிக்கை என்பவற்றை நோக்காகக் கொண்டு அது பல கட்டங்களாக (அவத்தைகளாக) வகுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பாதிக்கப்பட்ட மற்றும் சாட்சிகளைப் பாதுகாத்தல் தொடர்பான வழிகாட்டற் கொள்கைகளுடன் சட்ட இல. 4 வருடம் 2015 SOP யும் பின்வருவனவற்றில் கருத்தொருமித்துக் காணப்படுகின்றது.

- குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாத்தலும் பற்றிய முன்னேற்பாடுகள்.
- குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகளையும், முன்னேற்பாடுகளையும் அழுத்திக்கூறலும் அவ்வுரிமைகள் வரப்பிரசாதங்களை அனுபவிப்பதற்கான பொறிமுறை ஒன்றை வழங்குதலும்.

## பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காண்பது ஏன் அவசியமானதாகும்?

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங்காண்பது முக்கியமானதாகும். ஏனெனில் அவர்கள் தீவிரமான குற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தம்மைக் குறித்தும் தமது குடும்பத்தைக் குறித்தும் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளை கொண்டிருப்பர். மனித வியாபாரத்தில் ஈடுபட்ட நபர்கள் தொடர்பான முக்கிய தகவல்களையும் தெரிந்திருப்பர். இத்தகவலானது மனித வியாபார குற்றம் தொடர்பாக வழக்கு விசாரணையை தொடர்வதற்கும், தகவல்களைப் பெறவும் உதவியாக அமைவதுடன் குற்றம் தொடர்பான நீதி செயன்முறையை முன்னெடுக்கவும் உதவும். மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கு உடனடியான சரீர, உளவியல், சுகாதார தேவைகள் பெரும்பாலும் காணப்படுவதுடன், விசேட மருத்துவ உதவிகளும் அரவணைப்பும் அவசியமாக காணப்படும். பாதிக்கப்பட்ட நபருக்கு உதவி பெற்றுக்கொள்ளும் உரிமையும், தேவையும் காணப்படுவதால் பாதிக்கப்பட்ட நபர்களை சரியான முறையில் இனங்காண்பது முக்கியமானதாகும். அதன் மூலம் அவர்களுக்கு தேவையான ஆதரவையும், தொடர்ச்சியான உதவிகளையும் தயார்படுத்த முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக செயற்படும் போது மனிதவியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் என்போர் **குற்றம் ஒன்றினால் பாதிக்கப்பட்டோர் ஆவர்; அவர்கள் குற்றவாளிகள் அல்லர்** என்பதை எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு உதவியளிப்பதற்கும் பாதுகாப்பளிப்பதற்கும் உரிமைகளை அடிப்படையாகக்கொண்ட அணுகுமுறை அவசியம். அதனால் பாதிக்கப்பட்டோருக்கு உதவியை பெற்றுக்கொடுப்பதோடு குற்றத்தில் ஈடுபட்டோருக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க முடியுமாக அமையும். பாதிக்கப்பட்டோருடன் செயலாற்றும் அதிகாரிகள் அனுதாபத்துடனும் புரிந்துணர்வுடனும் பாதிக்கப்பட்டவரின் மனநிலையை உணர்ந்து அக்கறையுடன் பிரச்சினைகளை அணுக வேண்டும். பாதிக்கப்பட்டோர் தொடர்பாக எடுக்கும் தீர்மானமானது பாதிக்கப்பட்டவரின் சிறப்பான விருப்பை சார்ந்ததாக இருக்க வேண்டும். தம் சார்பில் எடுக்கப்படும் செயல்கள் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபருக்கு பாதுகாப்பு பெறவும், கலந்தாலோசனை செய்யவும், தகவலறியவும் முழு உரிமை உள்ளது.

## மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபரை பாதுகாத்தல்

ஏற்கனவே குறிப்பிட்டபடி, மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான நபர்கள் கடுமையான முறையில் சரீர ரீதியாகவும் / அல்லது பாலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டிருப்பர். பாதிக்கப்பட்ட அதிர்ச்சியின் மூலம் பாரிய எதிர் மறையான மனப்பாங்குக்கு உட்பட்டிருப்பர். குற்றச்செயலில் ஈடுபடும் குழுவினரின் தொடர்ச்சியான பயமுறுத்தல் அவர் முகம்கொடுத்த பாகுபாடு, அவமான உணர்வு என்பவற்றால் தோற்றுவிக்கப்பட்ட பயப்பிராந்தி காணப்படுவதால் பாதிக்கப்பட்ட நபருக்கு விசேட கவனிப்பும், உதவியும் தேவைப்படும். பாதிக்கப்பட்ட நபருக்கு எவ்வகையிலாவது நேரடி உதவி வழங்கிடும் போது, பாதிக்கப்பட்ட நபரின் துன்ப நிலையிலிருந்து பேண்தகு மீண்டெழலுக்கு பாதுகாப்பு வழங்குவதே பிரதான நோக்கமாக காணப்பட வேண்டும்.

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கு உதவி வழங்கும்போது தனிநபர் தொடர்பான விசேட அவதானம், பாதுகாப்பு மற்றும் நலன் அவசியமானவை ஆகும். இனங்காணப்பட்ட பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு உதவி வழங்கும் அதிகாரிகள் அந்நபர் பாதுகாப்பு உணர்வை பெறும் வகையில், இழந்து போன சுயமதிப்பையும், தன்னம்பிக்கையையும் கட்டியெழுப்பவும் கூடுமான அணுகுமுறையுடன் பாதிக்கப்பட்டோருக்கு சார்பாக பாதுகாப்பு தொடர்பான தீர்மானமெடுக்கவும் உதவி செய்ய வேண்டும். உதாரணமாக வழக்கு தொடர்பான தகவல்கள் இரகசியம் பேணப்படுமெனவும், ஒப்புதலளிக்கப்பட்ட சம்மதத்துடன் அவசியமான அனைத்து தகவல்களையும் பாதிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபருக்கு வழங்க வேண்டும். உணர்வுபூர்வமாக பாதிக்கப்பட்ட நபர் தொடர்பாக செயலாற்றுவதுடன், அவர்களின் அபாயத்துக்குட்பட்ட நிலைமையை புரிந்து கொண்டு பாதிக்கப்பட்ட நபருக்கு பாதுகாப்பான, பொருத்தமான தகவல்கள், உதவிகளை அதிகாரிகள் வழங்கலாம்.

## வழிகாட்டல் நெறிமுறைகள்

பின்வரும் வழிகாட்டற் கொள்கைகள் மனித வியாபாரத்திற்கு ஆட்பட்ட நபர்களுடன் இணைந்து செயலாற்றுபவர்களுக்கு ஏற்ற சிறந்த நடைமுறைகளாக கருதப்படுகின்றன.

1. **மனித வியாபாரத்தால் பாதிப்புக்குள்ளான நபரை புரிந்துக்கொண்டு பாதுகாப்பை முதன்மைப்படுத்தல்.**

   பாதிக்கப்பட்ட நபருக்கு அல்லது அவரது குடும்பத்தினருக்கு மனித வியாபார மோசடியில் ஈடுபட்ட நபர்களால் தீங்கு நேரிடக்கூடிய அபாயம் உண்டென்பதைக் குறித்து எச்சரிக்கையுடனும் பாதுகாப்புணர்வுடனும் மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும்.

2. **பாதிக்கப்பட்ட நபரின் பால், வயது, சமூக வகுப்பு, மதம், இனம் அடிப்படையில் முடிவுகள் எடுக்கவோ அல்லது பாகுபாடு காட்டவோ கூடாது.**

   தனி நபரின் உரிமைகள் மற்றும் கண்ணியம் என்பவற்றை எப்போதும் மதித்து நடப்பதுடன், அபாய நிலைக்குட்பட்ட நபர்கள் தொடர்பாக குறிப்பாக பெண்கள், சிறுவர்கள், ஏழைகள், சிறுபான்மையோர் தொடர்பாக விசேட அக்கறை எடுக்க வேண்டும்.

3. **எப்போதும் உதவிச் சேவைகள், புகலிடம், சமூகப்பணி, ஆலோசனை, சட்ட வழக்காடல், சட்ட அமுலாக்கல் பற்றித் தேவையான தொடர்பு கொள்ள வேண்டியவர்கள், பரிந்துரைகள் பற்றி ஆயத்தத்துடன் இருக்க வேண்டும்.**

   நீங்கள் வழங்கும் தகவல் தொடர்பில் சில குறித்த சேவை வழங்குநர் பற்றிய போதுமான விபரங்களை அறிந்திருக்க வேண்டும். உதாரணமாக பாதுகாப்பான புகலிடம் அமைந்துள்ள இடம்.

4. **மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் பல்வேறு தேவைகளை அரச அல்லது அரச சார்பற்ற உதவிகளின் ஒத்துழைப்புடன் இணைந்து பெற்றுக்கொடுங்கள்.**

   அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் இணைந்து பாதிக்கப்பட்ட நபருக்கு அவசியமான உதவிகளை பல வழிகளிலும் பெற்றுத்தருவது முக்கியமானதாகும். இதில் நீண்ட கால மருத்துவ உதவி, வழிகாட்டற் சேவை, தொழிற்பயிற்சி அல்லது சட்ட உதவிகள் உள்ளடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **பாதிக்கப்பட்ட நபரினதும் அவருடைய குடும்பத்தினரதும் இரகசியத்தையும், அந்தரங்கத்தையும் உறுதிப்படுத்துங்கள்.**

பாதிக்கப்பட்ட நபரின் வழக்கு தொடர்பான விபரங்கள், தனிப்பட்ட தகவல்களை பாதுகாக்கும் விதத்தில் செயல்படுவதை பழக்கமாக்கிக் கொள்வதுடன், பாதிக்கப்பட்ட நபருடன் செயலாற்ற அவசியமான ஒழுக்க முறைகளை அறிமுகம் செய்து, பாதிக்கப்பட்ட நபருடனான தொடர்பாடல்களின் இரகசியத்தன்மை பேணப்படுவதை உறுதிப்படுத்துங்கள். இதனால் பாதிக்கப்பட்ட நபர் தனது அந்தரங்கத் தன்மைக்கு மதிப்பளிக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வார்.

6. **மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபரால் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தகவல்களை வழங்குங்கள்.**

காணப்படும் பல்வேறு சேவைகள் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபருக்கு விளக்கமளிப்பதுடன் அதன் நோக்கம், செயல்முறைகள் பற்றிய விபரங்களைக் கூறுங்கள். ஒவ்வொரு தனிநபரும் கூறப்பட்டதை புரிந்துக் கொண்டாரா என்பதை உறுதிப்படுத்த அவசியமான நேரத்தை செலவிடுங்கள். கேள்வி கேட்க சந்தர்ப்பம் வழங்குங்கள். ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள முன்னர் செய்ய வேண்டிய அவசியமான படிமுறை இதுவாகும்.

7. **தானாகவே முன்வந்து தகவல் தெரிவிக்கும் சம்மதத்தை பெற்றுக்கொள்ளல்.**

பாதிக்கப்பட்ட நபர் குறித்த தகவல்களை பகிர்ந்துக் கொள்ளுமுன்னர், மற்றும் தாய் நாட்டுக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கு முன்னர் அல்லது குறிப்பெடுக்கு முன்னர், பாதிக்கப்பட்ட நபர் விருப்புடன் சம்மதம் தெரிவிப்பது முக்கியமாகும். தனி நபரொருவர் தம்மைப்பற்றிய அல்லது பிறரைப் பற்றிய தகவல்களை பகிர்ந்துகொள்ள சம்மதித்தால், அந்நபருக்கு உதவியளிக்க அவசியமான விபரங்களை மாத்திரம் வழங்குங்கள். (உதாரணம் - ஏனைய சேவையொன்று தொடர்பான குறிப்பு வழங்கல்) அல்லது பிறருக்கு உதவியளித்தல் (ஏனைய மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள்).

8. **ஒவ்வொரு தனிநபரினதும் உரிமைகள், தெரிவுகள், கண்ணியத்திற்கு மதிப்பளியுங்கள்.**

நேர்காணலை தனிப்பட்ட அமைவிடத்தில் மேற்கொள்வதனூடாக இதனை நடைமுறைப்படுத்தலாம். இதில் பாதிக்கப்பட்ட நபர் ஆண் அல்லது பெண் அலுவலருடன் அல்லது மொழி பெயர்ப்பாளருடன் உரையாடும் வாய்ப்பை வழங்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘நியம செயற்படுமுறைமைகளை’ (SOP) பின்பற்றுதல்

மனித வியாபாரம் பற்றிய ஆரம்ப தகவல் கிடைத்தவுடன் இனங்காணல், பாதுகாப்பு, குறிப்புகளை பாதிக்கப்பட்டோருக்கு வழங்கி சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவிகள் வழங்கப்படும்.


### SOP யின் நோக்கங்கள் :

- மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டோரை வினைத்திறனாக இனங்கண்டறியும், பாதுகாக்கும் நடைமுறை சாத்தியத்தை உறுதிபடுத்தி, மேலதிக உதவிகள் பெறுவதற்கான பரிந்துரை பொறிமுறையை உருவாக்குதல்.
- குற்றச்செயலில் ஈடுபட்டோருக்கு எதிராக வினைத்திறனுள்ள சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.
- பாதிக்கப்பட்ட நபர் இனங்காணப்பட்டது முதல் மீளிணைக்கப்படும் வரையில் அவரது பாதுகாப்பையும் மீண்டும் பாதிக்கப்படாத தன்மையையும் உறுதிப்படுத்தல்.
- பாதிக்கப்பட்ட நபருக்கு அவசியமான உதவிகளையும், பாதுகாப்பையும் பெற்றுத்தர அவசியமான படிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத விலைப்படுத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் பரிந்துரைப்பதற்குமான நியம செயற்படுமுறைகள் (கட்டம் 1 - 4)




பக்கம் 10ஐ பார்க்கவும்
பக்கம் 12ஐ பார்க்கவும்
பக்கம் 14ஐ பார்க்கவும்
பக்கம் 15ஐ பார்க்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத விலைப்படுத்ததலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் பரிந்துரைப்பதற்குமான நியம செயற்படுமுறைகள் (கட்டம் 5)

பாதிக்கப்பட்டவர் வெளிநாட்டவர் என இலங்கையில் இனங்காணப்படும் பட்சத்தில், 1ம் மற்றும் 2ம் கட்டங்களின் பின்னர் வெளிவிவகார அமைச்சினூடாக சம்பந்தப்பட்ட தூதரகத்திற்கு அல்லது தூதரக பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்படும். அவன்/அவள் முறைப்பாட்டுடன் தொடர விரும்பின் விசா நீடிப்பு வழங்கப்பட்டு புகலிடத்துக்கு அனுப்பப்படுவார். விசாரணைக்கு பின்னரான பாதுகாப்பு விடயங்கள் குறித்து கருத்தில் கொள்ளப்பட்டு, பாதிக்கப்பட்டவர் அவன்/அவள் சொந்த நாட்டிற்கு திருப்பியனுப்பப்படுவார். மீளத் திரும்பும் நடவடிக்கையானது விசாரணைக்கு முன் மற்றும் பின்னரான அதே முறையை ஒத்ததாக உள்ளது. மீளத் திரும்புதல் தொடர்பாக சர்வதேச அமைப்புக்கள் (IOM) அல்லது சிவில் சமூக அமைப்புக்கள் மூலம் ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும்.

அடையாளம் காணும் செய்முறையைத் தொடர்ந்து பொலிசார் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கும், அதனை தூதரகங்களுக்கு அல்லது தூதரக பிரதிநிதிகளுக்கு அறிவிக்கும்.

→ பாதிக்கப்படவர் முறைப்பாட்டோடு வழக்குத் தொடர விரும்பின் விசாவை நீடித்து வழங்குவதுடன் புகலிடத்திற்கு அனுப்ப வேண்டும். பாதிக்கப்பட்டவர் முறைப்பாட்டுடன் வழக்குத் தொடர விரும்பாவிடின் கூடிய விரைவில் தாய் நாட்டிற்கு திருப்பி அனுப்புதல்

↓ பாதிக்கப்பட்டவர் கட்டம் 2 - 4 ஐ பின்பற்றவும்

← வீடுதிரும்புதல் பற்றிய விருப்பத் தெரிவுகள் ஏதாவது இருப்பின் அவை அதிகார பூர்வமான மதிப்பீடுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படல். தேவை ஏற்படும் பட்சத்தில் உதவியளித்தலுக்கான அறிவிப்புக்கள், போய்ச் சேரவேண்டிய நாட்டிலுள்ள அதிகார அமைப்புகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்படல்.

↓ அவசியமான பயண ஏற்பாடுகள் (ஏதாவது வேறு பிரச்சினைகள் இருப்பின்) திருப்பி அனுப்பப்படுவதற்கான ஒழுங்குமுறைகள் மற்றும் உறுதி செய்யப்பட்ட திகதி நிர்ணயிக்கப்படல் என்பவை குறித்து ஏற்றுக் கொள்ளும் நாட்டிலுள்ள அதிகார அமைப்புக்களுடன் கலந்தாலோசிக்கப்படுதல்.

→ புகலிடம் பற்றி அறிவித்தல் வழங்கல், பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். குடிவரவு குடியகல்வு ஆவணங்களை தூதரகங்கள்/தூதரக பிரதிநிதிகளினூடாக மேற்கொள்ளப்படும்.

↓ புறப்படுவதற்கு முன்னரான தகவல்கள் மற்றும் குடிவரவுத் திணைக்களம். கூட அழைத்துச் செல்பவர், திரும்பி வருதற்கான செயல்முறைகள் தொடர்பான உதவிகள் என்பவற்றை வழங்கல்.

← பாதிக்கப்பட்டவர் முறைப்படுத்தப்பட்டு சேரும் நாட்டிலுள்ள அதிகாரிகளால் வரவேற்கப்பட்டார்.

கட்டம் ஐந்து

பக்கம் 16ஐ பார்க்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டம் ஒன்று

- ஆரம்ப தகவல் அறிக்கை / முறைப்பாடு
- காப்பாற்றுதல்
- ஆரம்ப விசாரணை / செய்ய வேண்டிய வேலைகளின் பட்டியல்
- ஆரம்ப தகவல் பரிமாற்றம்
- தேவைகளை இனங்காணல்

மனித வியாபாரம் குறித்து கண்டறிந்து, பாதிக்கப்பட்ட நபரை இனங்காணுவதற்கான முதல் படிமுறை ஆரம்ப தகவலாகும். இதன் மூலம் பாதிக்கப்பட்ட நபரின் அடிப்படைத் தேவைகளாக புகலிடம் மற்றும் மருத்துவ உதவிகள் சுட்டிக்காட்டப்படும்.

முதற் கட்டத்தில் குற்றத்தில் துணிந்து ஈடுபட்ட நபர் தொடர்பான ஆரம்ப தகவல்கள் பகிரப்பட்டு, அடுத்த கட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்படும். மனித வியாபாரம் தொடர்பான முறையீடுகளும் / அல்லது தகவல்களும் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் / அல்லது தனி நபரிடமிருந்து பெறப்படலாம். மனித வியாபார குற்றம் தொடர்பான ஆரம்ப தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனங்கள் மற்றும் / அல்லது தனிநபர்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

- காவற்துறை (வெளியூரில் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட ஆண்கள் / பெண்களுக்கான குற்றப் புலனாய்வுப் பிரிவு / பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவு / சகல உள்ளூர் காவல் நிலையங்கள்).
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (SLBFE - ஒப்புரவாக்கற் பிரிவு, விசேட விசாரணைப் பிரிவு, மனித வியாபார தடுப்பு பிரிவு).
- குடிவரவு குடியகல்வு திணைக்களம் (விசாரணைப் பிரிவு . விமான நிலைய குடியகல்வு பிரிவு).
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA - பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு).
- தூதரகங்களும் வெளிநாட்டு பிரதிநிதிகள் அலுவலகங்களும்.
- உதவி இலக்கங்கள் (NCPA / காவல் நிலையத்தால் இயக்கப்படுபவை / IOM).
- சர்வதேச நிறுவனங்கள் (IOM)
- அரச சார்பற்ற நிறுவனங்கள் (இலங்கையினுள் மற்றும் இலங்கைக்கு வெளியில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியூரிலிருந்து செய்யப்படும் முறைப்பாடுகளும் இலங்கையிலுள்ள தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் அலுவலகங்களில் ஏற்றுக்கொள்ளப்படும். அவத்தை 5ஐப் பார்க்கவும்.

சில வேளைகளில் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் பற்றிய ஆரம்ப தகவல்கள் காவற்துறையினரின் ரோந்து நடவடிக்கையின் போது / முற்செயற்பாட்டு விசாரணையின் போது / வழமையான காவற்துறையினரின் பரிசோதனையின் விளைவாக பெறப்படலாம். பாதிக்கப்பட்ட நபர்கள் தமது விருப்பத்திற்கு மாறாக, முறைப்பாட்டை செய்ய முடியாத சந்தர்ப்பமே காணப்படுவதால், அவ்விடத்திலிருந்து காப்பாற்றுவது முக்கியமானதாகக் காணப்படுவதோடு, உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி நேரிடும். காப்பாற்றப்பட்ட வெளிநாட்டு பிரசையொருவர் மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபரென உறுதி செய்யப்படுமாயின் அவர் இலங்கை விசாவில் குறித்த காலத்திற்கு மேல் தங்கியிருப்பாரெனில் தண்டப்பணம் மற்றும் விசா கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படுவார்.

- குற்றம் இடம்பெற்ற இடத்தில் / சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட நபர் கண்டறியப்படுவாரெனின் குற்றவாளியாக அவரைக் கருதாது சந்தேக நபர்களிடமிருந்து கட்டாயமாக வேறுபிரிக்கப்பட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளவும்.

பெறப்பட்ட தகவல்களே ஆரம்ப விசாரணைகளுக்கு அல்லது மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர் என்பதை தீர்மானிக்க வழிகாட்டுவதாக அமைய வேண்டும். ஆரம்ப விசாரணையின் போது பாதிக்கப்பட்ட நபரின் தேவைகள் இனங்காணப்பட வேண்டும். ஆரம்ப விசாரணையானது பயிற்சி பெற்ற அலுவலரால் (அவசியமாயின் பெண்) இடம் பெறுவதோடு பாதிக்கப்பட்ட நபரின் 'பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புணர்வு' தேவைகள் உறுதி செய்யப்பட வேண்டும், விசேடமாக சரீர ரீதியான பாதுகாப்பு (அவரது குடும்பத்தினதும்) மற்றும் பாதுகாப்பு முறைகள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட நபர் இலங்கையர், வெளியூரைச் சேர்ந்தவர், சிறுவர் என்ற அடிப்படையில் தேவைகள் வேறுபட்டுக் காணப்படும். பாதிக்கப்பட்ட நபர் வெளியூரைச் சேர்ந்தவர் எனின், அவசியமெனின் மொழிபெயர்ப்பாளர் ஒழுங்கு செய்யப்படுவதோடு, அவருடன் தொடர்புடைய தூ தரகம் /வெளிநாட்டு பிரதிநிதிகள் அலுவலகத்துக்கு தகவலளிக்கப்பட வேண்டும். மொழிபெயர்ப்பாளர் குறித்த தேவையானது வெளிநாட்டு விவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டு மொழிபெயர்ப்புச் சேவையை பொருத்தமான தூதரகம் அல்லது வெளிநாட்டு பிரதிநிதிகள் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபர்கள்; மொழி தொடர்பான அறிவற்றவர்களுக்கு, குறித்த அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள மொழிபெயர்ப்பாளர் ஒருவர் முக்கியமாக தேவைப்படுவார். இனங்காணும் செயற்பாட்டை ஆரம்பிக்கு முன்னர் தேவையாயின் மொழிபெயர்ப்பாளர் (பயிற்சி பெற்றவர் விரும்பத்தக்கது) ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டம் இரண்டு

- அவசர தேவைகளுக்கான உடனடி பதில்
- மருத்துவ பராமரிப்பு
- வயது உறுதிப்படுத்தல் (சிறுவரா அல்லது வயது வந்தவரா என்பதை தீர்மானித்தல்)
- புகலிடம் தொடர்பான பரிந்துரை
- பரிந்துரைக்குப் பின் தகவல் வழங்கல்.
- (தேசிய / வெளிநாட்டு) பாதிக்கப்பட்ட நபரின் முறைப்பாட்டை / ஒத்துழைப்பை வைத்து மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்தல் தொடர்பான படிமுறைகள்
- பிணை

அவத்தை இரண்டில் இனங்காணப்பட்ட நபரின் உடனடி தேவைகளுக்கு உதவியும், பாதுகாப்பும் வழங்குவதற்கான செயற்பாடுகள் இடம்பெறும். இதில் பங்குபற்றுவோர் பாதிக்கப்பட்ட நபருக்கு வழங்கப்படும் உதவிச்சேவைகள் அச்சேவைகளை வழங்குவோர் தொடர்பான தகவல்களை அறிந்து வைத்திருப்பது முக்கியமாகும்.

**மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர் குறித்த முதல் செயற்பாடானது அக்குற்றத்தினால் ஏற்பட்ட கடும்பயத்தின் தாக்கத்துக்கு முகங்கொடுக்க அவசியமான சமூக உளவியல் உதவியாகும்.**

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபருடன் தொடர்பு கொள்ளும் அனைவரதும் கடமையாவது, ஆரம்ப தகவல்களைக் பெற்று காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபடும்போது, அவர்களது அனைத்து செயற்பாடுகள் தொடர்பாகவும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட வகையில் இணைப்பாக்கத்துடன் செயல்பட வேண்டும். அப்போது அந்நபர்களின் தேவைகளும், அக்கறைகளும் கவனியாமல் விடுபட்டுப் போகாது. **ஒரு சிறந்த ஒருங்கிணைக்கப்பட்ட உதவியானது பாதிக்கப்பட்ட நபரின் 'விருப்பங்களுக்கு' கண்ணியமளிக்கப்படுவதை உறுதி செய்யும்.**

அடிப்படைத் தேவைகளுக்குள் உள்ளடங்குபவை;

- உணவும் உடையும்
- மருத்துவம்
- உளநல ஆலோசனை
- புகலிடம்
- தன்னைக் குறித்தும் குடும்ப உறுப்பினரைக் குறித்துமான பாதுகாப்புத் தேவை
- சட்ட ரீதியான உதவி / உதவிக்கும் வழிகாட்டலுக்குமான தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருத்துவ உதவி:** உள்ளூர் காவல் நிலைய OIC / நிறுவன தலைவர் பாதிக்கப்பட்ட நபரை இனங்கண்ட / காப்பாற்றிய பின்னர் உடனடியாக தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்பட வேண்டுமென்பதை உறுதி செய்ய வேண்டும். எந்தவொரு மருத்துவ பரிசோதனைக்கு முன்னரும் வலிதான சம்மதம் பெறப்பட வேண்டுமென்பதை உறுதி செய்ய வேண்டும். எவ்வாறாயினும் குறித்த நபரின் வாழ்க்கை அபாய சூழ்நிலைக்கு உட்பட்டு, சம்மதம் பெற முடியாத நிலைமை காணப்படும்போது, உயிரைக் காப்பாற்றுவதற்கென தேவையான மருத்துவ வசதிகளை மருத்துவ வசதி வழங்குநர்கள் பெற்றுத்தர வேண்டும்.

**வயதை உறுதிப்படுத்தல்:** பாதிக்கப்பட்ட நபர் வயதுவந்தவரா அல்லது 18 வயதுக்குட்டபட்ட சிறுவரா என்பதை உறுதிசெய்ய வயதை உறுதிப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட நபர் சிறுவரைப் போன்ற தோற்றத்துடன் இருப்பாரெனில் NCPA / பெண்கள் சிறுவர்களுக்கான அமைச்சு / உள்ளூர் காவல் நிலையம் மூலமாக வயதை நிர்ணயிக்கும் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட நபர் வளர்ந்தோரைப் போல தோற்றம் அளிப்பாரெனில் (18 வயதுக்கு மேற்பட்டோராக) பொறுப்பான காவலதிகாரியுடன் நீதிமன்றத்துக்கு வழிகாட்டப்பட வேண்டும். வயதை குறித்த சந்தேகம் இருப்பின் பாதிக்கப்பட்டவரை சிறுவராக கருத வேண்டும். சிறுவர் மற்றும் வளர்ந்தோருக்கான அனைத்து சட்ட நடவடிக்கைளிலும் (வயதை அறிந்த அல்லது அறியாத மற்றும் முறையீட்டை மேற்கொண்டவர்கள் தொடர்பில்) (JMO) மருத்துவ அதிகாரியின் உதவியுடன் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**புகலிட உதவி:** பாதிக்கப்பட்டவரென இனங்காணப்பட்ட நபருக்கு பாதுகாப்பான புகலிடம் அவசியம் எனின், காவற்துறையின் பொருத்தமான புகலிடத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கு முன்னர், நீதிமன்றத்திடமிருந்து அறிவுறுத்தல்களை / ஆணைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட நபரை காவல் நிலையத்தில் அல்லது குடியகல்வு தடுப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்படக்கூடாது. மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கென பெண்கள் விவகார அமைச்சினால் நிர்வகிக்கப்படும் புகலிடங்கள் காணப்படுகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் புகலிட உதவிகள் பெற்றுக்கொள்ளப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டம் மூன்று

- காவற்துறையினரின் விசாரணைகள் (ஆரம்ப விசாரணை)

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்டவரென இனங்காணப்பட்ட நபர் தொடர்பான விசாரணைகள் கட்டம் மூன்றில் அடங்கும் மனித கடத்தல் குற்றம் தொடர்பாக நிர்ணயிக்கும் சான்றாக விசாரணையே காணப்படும். செயற்பாடு (வாங்குதல், வாகனத்தில் அனுப்புதல், ஆட்சேர்த்தல்) செயல் (பயமுறுத்தல், ஏமாற்றல்)

நோக்கம் (ஏமாற்றுதல்) சான்று சேகரித்தலும், விசாரணைகளும் விசாரணை அதிகாரியாலும் (IO) மருத்துவ அதிகாரியாலும் (JMO) நடாத்தப்படும். விசாரணை அதிகாரியின் அடிப்படை நோக்கமாக சான்று சேகரித்தல் காணப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட நபர்கள் நீதிமன்றம் மற்றும் சட்ட நடவடிக்கைகள் குறித்து பயமடைந்தும் கலக்கமடைந்தும் காணப்படலாம். அச்செயன் முறைகளை முன்னெடுக்க விசாரணை அதிகாரி உதிவிசெய்து வழிகாட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டம் நான்கு

- வழக்குத் தொடுத்தல்
- விசாரணை
- விசாரணையின் - பின்

பிரிவு நான்கில் நீதிமன்ற வழக்கு தொடுப்பின் போதும் விசாரணையின்போதும், குற்றம் தொடர்பான இரகசியமான தகவல்கள் பாதுகாக்கப்படும் என்பதை பாதிக்கப்பட்ட நபருக்கு கூற வேண்டும். மற்றும் குற்றச்செயலில் ஈடுபட்டவர்களை திறந்த நீதிமன்றத்தில் முகம் முகமாக சந்திக்க வேண்டும் என்பதையும் கூற வேண்டும். குறித்த நபருக்கு விரோதமாக இழைக்கப்பட்ட குற்றம் தொடர்பாக நஷ்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ளும் சட்டம் செயற்பாடுகள் பற்றிய தகவல்களும் கூறப்பட வேண்டும். விசாரணை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நபருக்கு/குடும்ப அங்கத்தவருக்கு குற்றச்செயலில் ஈடுபட்டவரால் பயமுறுத்தல் வரலாம் என்பதால் எச்சரிப்புடனிருக்க வேண்டும். அத்துடன் குறித்த நபரின் மண அழுத்தம்/பயம் ஏனைய சரீர, உளவியல் நெருக்கடிகள் குறித்தும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

நீதிமன்ற வழக்குத் தொடுக்கும் கட்டத்தின்போதும் காவற்துறையினரின் முக்கிய பங்கு காணப்படும். குறித்த வழக்குக்கென நியமிக்கப்பட்ட காவலதிகாரி, பாதிக்கப்பட்ட நபருக்கு எல்லா படிமுறைகளிலும் பாதுகாப்பு வழங்குவது குறித்த எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

### விசாரணையின் - பின்

விசாரணையின் பின்னர் பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து, மேலதிக பாதுகாப்பு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட நபர் சட்டத்தின் அடிப்படையில் இழப்பீடு பெற்றுக்கொள்ளும் உரிமையுடைவராவார். தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட நபருக்கு பாதுகாப்பு வழங்குவது முக்கியமானதாகும். விசேடமாக நீதிமன்றத்தில் நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டால் நீதிமன்ற தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக்கோரி மனு கேட்கும் தகுதி இருப்பது அவதானிக்கப்பட்டால், உள்ளூர் வழக்கறிஞர் நிர்வாகத் தன்மை, அவசியமான செயற்பாட்டுகளை அவதானித்து, மறுபரிசீலனை செய்வற்கான நீதிமன்றத்தில் மனு கேட்கலாம்.

விசாரணையின் பின், மீள் புலம்பெயர்தலுக்கான உதவி, உதாரணமாக சமூக உதவி, தொழிற் பயிற்சி /வருமான மார்க்கம் போன்றன தொடர்புடைய அதிகாரிகள் /அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் பாதிக்கப்பட்ட நபருக்கு அளிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் காரணமாக, கிடைக்கக்கூடிய தெரிவுகள், வழிவகைகள் பற்றிய உண்மையான படத்தை பாதிக்கப்பட்ட நபருக்கு வழங்க வேண்டும். உண்மையற்ற எதிர்பார்ப்புகளானது வினைத்திறனுள்ள மீள் குடிப்பெயர்வு செயன்முறையில் இழப்பைக் கொண்டு வரலாம். (இலங்கை) அல்லது சொந்த தேசத்திற்கு திரும்புதல் தொடர்பான பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் பொருத்தமான அதிகாரிளுடன் பகிரப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டம் ஐந்து

- இலங்கையை வந்தடைதலும் இலங்கையிலிருந்து திரும்பிச் செல்லுதலும்

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபரின் திரும்பிச் செல்லும் செயன்முறையானது இரு கட்டங்களைக் கொண்டது. பாதிக்கப்பட்ட நபர் இனங்காணப்பட்ட பின்னர், முறைப்பாட்டுடன் தொடர்ந்து செயற்பட விரும்பவில்லை எனின் குறித்த நபரை (வெளிநாட்டு பிரசை அல்லது வெளிநாட்டிலுள்ள இலங்கைப் பிரசை) கூடிய விரைவில் தாய் நாட்டுக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இரண்டாம் கட்டம் என்னவெனில், பாதிக்கப்பட்ட நபர் இனங்காணப்பட்ட பின்னர் முறைப்பாட்டை பதிவு செய்த பின்னர், நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்று சோதனை முடிவடைந்த பின்னர், பாதிக்கப்பட்ட நபரை செல்ல வேண்டிய நாட்டிற்கு திருப்பி அனுப்புவதாகும்.

**இலங்கையிலிருந்து வெளிநாட்டுப் பிரசைகள் திரும்பிச் செல்லுதல்:** இனங்காணல் படிமுறைகளைத் தொடர்ந்து காவற்துறையினர் வெளிநாட்டு விவகார அமைச்சுக்கு (MFA) பாதிக்கப்பட்ட நபர் ஒரு வெளிநாட்டு பிரசை என்பதை அறிவிக்க வேண்டும். MFA அதனை பாதிக்கப்பட்ட நபரின் நாட்டு தூ தரகம் / வெளிநாட்டு பிரதிநிதிகள் அலுவலர்களுக்கு அறிவிக்கும். பாதிக்கப்பட்ட நபர் முறைப்பாட்டுடன் தொடர்ந்து செயற்பட விரும்பவில்லை எனின், கூடிய விரைவில் தாய்நாட்டுக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். முறைப்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல விரும்பினால், விசா நீடிக்கப்படுவதோடு இருப்பிட உதவிகள் வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட நபரின் வீட்டிற்கு திரும்புதல் தொடர்பான கரிசனைகள் பொருத்தமான அதிகாரங்களுடன் பகிரப்பட வேண்டும்.

**SLBFEக்கு நேரடியாக அல்லது குடும்ப அங்கத்தவர் மூலம் மற்றும் தூதரங்கள் மூலம் வெளிநாட்டில் பாதிக்கப்பட்ட இலங்கை நபர் பற்றிய முறைப்பாடுகள் கிடைக்கப் பெறலாம்.** SLBFE இம்முறையீட்டை அவர்களின் விசேட விசாரணைக் பிரிவிடம் பொறுப்பளிக்க வேண்டும், அவசியமேற்படும்போது வெளிநாட்டு விவகார அமைச்சு மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கும் அறிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட நபருக்கு நடமாடுவதற்கான சுதந்திரம் இல்லாதிருப்பின் அல்லது பயமுறுத்தலுக்குட்பட்டிருப்பின், தூதரகத்தால் உத்தியோகபூர்வ வேண்டுகோளொன்று உள்ளூர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு காப்பாற்றுவதற்காக குறுக்கீடு செய்யப்படும். இனங்காணல் இடம் பெற்றபின் காப்பாற்றுதல் / பாதிக்கப்பட்ட நபருக்கு குறிப்பு வழங்கல், அவசர உதவிகள் வழங்கல் முதலியன தூதரகத்தால் / சர்வதேச நிறுவனங்கள் / சிவில் சமூக நிறுவனங்களால் (உதாரணம் IOM) வழங்கப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாக்களும் விடைகளும்:

**மனித வியாபாரத்தால் பொதுவாக பாதிக்கப்படும் நாடுகள் எவை? இக்குற்றம் இலங்கையில் பாரிய எண்ணிக்கையில் இடம்பெறுகின்றதா?**

மனித வியாபாரமானது உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் பாதிக்கின்றது. சொந்த நாடு, செல்லும் நாடு அல்லது சென்ற நாடு - அல்லது எல்லாம் இணைந்தும் பாதிக்கப்படுகின்றது. அபிவிருத்தி குறைந்த நாடுகளில் இருந்து அதிகளவிலும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் வரையிலும் இக்குற்றம் இடம்பெறுகிறது. வறுமை, தொழிலின்மை, முரண்பாடு அல்லது ஏனைய கரணங்களால் பிற நாடுகளில் மேலான வாழ்க்கை சந்தர்ப்பத்துக்காக காத்திருப்போரே இவ்வாறு ஏமாற்றம் அடைகின்றனர். இந்தியா, நேபாளம் போன்ற ஏனைய ஆசிய நாடுகளில் இடம்பெறுவதைப் போல் இலங்கையில் பாரிய அளவில் இக்குற்றம் இடம்பெறாவிட்டாலும் கூட வற்புறுத்தப்பட்ட ஊழியம், நிர்ப்பந்திக்கப்பட்ட விபச்சார நிலைமைகள் காணப்படுகின்றன. பெரும்பாலான மனித வியாபாரங்கள் ஒரு நாட்டினுள்ளும் ஒரு பிராந்தியத்தினுள்ளுமே இடம் பெறுகின்றன.

**இக்குற்றத்தால் பாதிக்கப்படும் நபர்கள் யார்?**

இக்குற்றத்தால் பாதிக்கப்படும் நபர் எந்த வயது, பால், சமூக நிலைமையிலும் கூட இருக்கலாம். ஆய்வுகள் மற்றும் அறிக்கைகளின் படி பெரும்பாலான இனங்காணப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்கள் பாலியல் ரீதியில் ஏமாற்றப்பட்டோர் ஆவர். வற்புறுத்தப்பட்ட ஊழியத்தில் பாரிய எண்ணிக்கையான ஆண்கள் கட்டு நிர்மாண பணியிடங்களில் வேலை செய்யவும், பண்ணைகள், தொழிற்சாலைகள், மீன் தொழிற்சாலைகளில் வேலை செய்யவும் மனித வியாபாரத்துக்குட்படுகின்றனர். பயிற்சியற்ற பெண்களும், வீட்டுப் பணிப்பெண்களாக வேலைசெய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பொதுவான விடயம் என்னவெனில் குற்றவாளிகள் குறித்த நபரின் நிலைமையை தமக்கு சாதமாக்கிக் கொண்டு மோசடி செய்து ஏமாற்றி மனித வியாபாரத்துக்கு உட்படுத்துகின்றனர். இதில் பாதிக்கப்பட்ட நபரின் ஒப்புதல் பொருந்தாது ஏனெனில் அது ஏமாற்றிப் பெறப்பட்டது ஆகும். பெரும்பாலான மனித வியாபாரம் அதே நாட்டை சேர்ந்த நபர்களால் செய்யப்படுகின்றது. காரணம் அவர்கள் சமுதாய நிலைமைகள் பற்றி தெரிந்திருப்பதனால் ஆகும்.

**பாதிக்கப்பட்ட நபரை இனங்காண்பதிலுள்ள சவால்கள் எவை?**

சிக்கலான இக்குற்றத்தின் மிகக்கடினமான பணியாவது மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை இனங் காணுதலாகும். இதிலுள்ள சவாலாவது ஆட்கடத்தலுக்கு உட்பட்டவர்கள் அல்லது முறையற்ற குடியகழ்வு முறைகளை மேற்கொண்டோரை மனித வியாபாரத்துக்குட்பட்டோரிடமிருந்து இனங்காண்பதாகும். அத்துடன் சுயபாதுகாப்பு மற்றும் குடும்ப அங்கத்தினரின் பாதுகாப்பு அல்லது குற்றம் குறித்தான கடும்பயம் காரணமாக நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்டவர்கள் என வெளிப்படையாக சொல்லி முறைப்பாடு செய்து தம்மை இனங்காட்டுவதற்கு முன்வருவதில்லை. ஆரம்ப விசாரணை அல்லது பேட்டியின் போது பாதிக்கப்பட்வராக ஆக்கப்படும் மனபதைப்பு, அதிர்ச்சி காரணமாக சரியான தகவல்களை கூறாமலும் விடலாம்.

**மனித வியாபாரம் ஆட்கடத்தல் ஆகிய குற்றங்களுக்கிடையிலான வேறுபாடுகள யாவை?**

மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட நபர் முறையற்ற குடிப்பெயர்வில் ஈடுபட்டவரென தவறாகக் கருதப்பட்டு நாடு கடத்தப்படும் அல்லது தடுத்து நிறுத்தப்படும் இடருக்குட்படுவதை தடுக்கு முகமாக மனித வியாபாரம் மற்றும் ஆட்கடத்தல் பற்றிய தெளிவான விளக்கம் ஒன்று காணப்பட வேண்டும்.

வாழ்க்கை மேம்பாட்டு சந்தர்ப்பங்களைத் தேடும் மக்களை துன்புறுத்தி இலாபம் பெறும் நோக்குடன் குற்ற வலையமைப்பினால் சட்டரீதியற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதே மனித வியாபாரமும் ஆட்கடத்தலுமாகும். ஆட்கடத்தல் என்பது குடிப்பெயரும் நபருக்கு சட்டரீதியற்ற முறையில் நாட்டைக் கடந்துச் செல்ல உதவி புரிதலாகும். மனித வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் நோக்கமாவது மனித வியாபாரத்துக்குட்பட்ட நபரை ஏமாற்றுதலாகும். இந்த விளக்கத்தினூடாக பார்க்கும்போது ஆட்கடத்தல் செயன்முறையானது குடிப்பெயர்பவர் குறித்த இடத்தை சென்றடைந்ததும், தன்னை கடத்தியோருக்கு பணம் செலுத்தியதும் நிறைவடையும். ஆனால் மனித வியாபாரமானது மனித வியாபாரிகளுக்கு இலாபம் வழங்கி ஒரு நபர் தொடர்ச்சியான துஷ்பிரயோகத்துக்கு உட்படுதலாகும். ஆட்கடத்தல் குறித்து கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயமாவது; குடிப்பெயர்ந்தவர் குற்றவாளியாகக் கருதப்பட்டு குற்றத்துக்கான தண்டனை வழங்கப்படுவதை விட, சட்ட ரீதியற்ற முறையில் வெளியேற உதவிய நபரே தண்டனைக்குட்பட வேண்டும்.

ஆட்கடத்தல் என சந்தேகிக்கும் நிகழ்வுகளை முறைப்பாடு செய்ய பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவின் ஆட்கடத்தல் எதிர்ப்பு விசாரணைக் கிளையை (Anti Human Smuggling Investigation Branch - AHSIB) 011 2392917 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுங்கள்.

ஆட்கடத்தல் செயற்பாடுகளை முறைப்பாடு செய்ய குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் விசாரணைப் பிரிவை 011 5329630, 011 5329641 என்ற இலக்கங்களுக்கூடாக தொடர்பு கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி முகவர்களின் பட்டியல்

| நிறுவனம் | தொடர்பு இலக்கம் |
|---|---|
| புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) (மேலதிக விபரங்களுக்கு) | 0766 588 688 |
| குற்றவியல் விசாரணை திணைக்களம் (CID) ஆட்கடத்தல் / மனித வியாபார தடுப்புப் பிரிவு | 0112 392 917 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | 1929 |
| காவற் துறை - பெண்கள் சிறுவர்களுக்கான அமைச்சு | 0112 444 444 |
| காவற் துறை அவசர அழைப்பு | 119 |
| காவற் துறை தலைமையகம் | 0112 421 111 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (SLBFE) - மனித வியாபார தடுப்பு பிரிவு | 0112 884 707 |

**மனித வியாபாரத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பாதுகாப்பை பெற்றுக்கொடுக்கும் போது உதவியைப் பெற்றுக்கொள்ள இலங்கை பெண்கள் பிரிவு (Women's Bureau) இலக்கம்** 011 218 7270[iii] **அழையுங்கள்.**

மனித வியாபாரத்தால் பாதிப்புற்ற பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக வேண்டி இலங்கை அரசாங்கத்தினால் தற்பொழுது நிர்வகிக்கப்படும் அரசாங்க பாதுகாப்பு நிலையமானது பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் பெண்கள் பிரிவின் கீழ் இயங்குகின்றது.

ஆதே போல்,

மனித வியாபாரத்தால் பாதிப்புற்றவர்களுக்கு உதவுமுகமாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமூக சேவை உத்தியோகத்தர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், அறிவுரை வழங்கல் உத்தியோகத்தர், நன்னடத்தை உத்தியோகத்தர், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலன்புரி உத்தியோகத்தர், பொருளாதார மேம்பாட்டு உத்தியோகத்தர், திறன்விருத்தி மேம்பாட்டு உத்தியோகத்தர், சமூக மேம்பாட்டு உதவி உத்தியோகத்தர் போன்றவர்களின் பிரிவுகளிலிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக வேண்டி அவர்களின் தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய தொடர்புத் தகவல்களை உங்களோடு வைத்திருக்க மறந்து விடாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீதி அமைச்சு

International Organization For Migration (IOM)

The UN Migration Agency

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org